இனிமையான குழந்தைகளே ! புத்தியை (ரி஀ைபன்) தூய்மையாக ஆக்க வேண்டும் என்றால், ஒரு தந்தையின் நினைவில் இருங்கள். நினைவின் மூலமாகத் தான் ஆத்மா தூய்மையாக ஆகிக் கொண்டே போகும்.

கேள்வி: தற்சமயம் மனிதர்கள் தங்களது நேரம் மற்றும் பணத்தை எவ்வாறு வீணாக்கிக் கொண்டி ருக்கிறார்கள்?

பதில்: யாராவது சரீரம் விடும் பொழுது அவருக்கு பின்னால் எவ்வளவு பைசாவை செலவு செய்து கொண்டே இருக்கிறார்கள். சரீரத்தை விட்டு சென்று விட்டார் என்றால், அதற்கு எந்த மதிப்பும் இல்லை. எனவே அதற்கு பின்னால் என்னவெல்லாம் செய்கிறார்களோ அதில் தங்களது நேரம் மற்றும் பணத்தை வீண் செய்கிறார்கள்.

ஓம் சாந்தி. ஆன்மீகத் தந்தை வந்து ஆன்மீகக் குழந்தைகளுக்குப் புரிய வைக்கிறார். இவரும் கூட அவ்வாறே கூறுகிறார் அல்லவா? பிறகு தந்தை என்றாலும் சரி, தாதா (பிரம்மா) என்று கூறினாலும் சரி. தாதா கூட "ஆன்மீக தந்தை குழந்தைகளாகிய உங்களுக்கு இறந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர்காலம் பற்றிய இந்த ஞானத்தை கூறுகிறார்" என்பார். உண்மையில் சத்யுகம் முதற்கொண்டு திரேதா கடைசி வரை என்ன ஆகியது என்பதே முக்கியமான விஷயம் ஆகும். மற்றபடி துவாபர கலியுகத்தில் யார் யார் வந்தார்கள் என்ன நடந்தது, அது பற்றிய சரித்திரம் பூகோளமோ நிறைய உள்ளது. சத்யுகம் திரேதா பற்றிய எந்த ஒரு சரித்திரமோ பூகோளமோ இல்லை. மற்ற எல்லோருடைய சரித்திரம் பூகோளமும் உள்ளது. மற்றபடி தேவி தேவதைகளை இலட்சக்கணக்கான வருடங்களுக்கு முன்னால் எடுத்துச் சென்று விட்டார்கள். இது எல்லையில்லாத அறிவீனம் ஆகும். நீங்கள் கூட எல்லையில்லாத அறிவீனத்தில் இருந்தீர்கள். இப்பொழுது கொஞ்சம் கொஞ்சம் புரிந்து கொண்டு இருக்கிறீர்கள். ஒரு சிலரோ இப்பொழுது கூட ஒன்றும் புரியாமல் உள்ளார் கள். நிறைய புரிந்து கொள்ள வேண்டி உள்ளது. தந்தை அபுவின் மகிமை பற்றி புரிய வைத்துள்ளார். இது பற்றி சிந்தனை செய்ய வேண்டும். உங்களுடைய புத்தியில் வர வேண்டும். நீங்கள் இங்கு அமர்ந்துள்ளீர்கள். உங்களுடைய நினைவார்த்தமான தில்வாலா கோவில் எப்பொழுது அமைக்கப்பட்டது. 1250 வருடங்கள் ஆகிறது என்று கூறுகிறார்கள். பின் மீதம் எவ்வளவு ஆண்டுகள் இருந்தன? 3750 வருடங்கள் இருந்தன. எனவே அவர்கள் கூட இப்பொழுதைய நினைவார்த்தம் மற்றும் வைகுண்டத்தின் நினைவார்த்தம் அமைத்துள்ளார்கள். கோவில்களைக் கட்டுவதில் கூட போட்டி இருக்கிறது அல்லவா? ஒருவரை விட மற்றவர் நல்லதாக கட்டுவார்கள். இப்பொழுதோ கட்டுவதற்கு பைசா தான் எங்கே உள்ளது, பைசாவோ நிறைய இருந்தது. அதனால் தான் சோமநாத்தின் கோவில் எவ்வளவு பெரியதாக அமைத்திருந்தார்கள். இப்பொழுதோ அமைக்க முடியாது. ஆக்ரா போன்ற இடங்களில் அமைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்றாலும் கூட அவை எல்லாமே வீண் ஆகும். மனிதர்களோ இருளில் உள்ளார்கள் அல்லவா? அவர்கள் அமைத்து முடிப்பதற்குள் விநாசம் கூட வந்து விடும். இந்த விஷயங்களை யாரும் அறியாமல் உள்ளார்கள். இடிக் கிறார்கள் மற்றும் கட்டிக் கொண்டே இருக்கிறார்கள். பைசா இலவசமாக வந்து கொண்டே இருக்கிறது. எல்லாமே வீணாகிக் கொண்டே இருக்கிறது எல்லாமே வீண். யாராவது இறந்தால்

எவ்வளவு நேரத்தை வீணடிக்கிறார்கள். நாம் எதுவுமே செய்வதில்லை. ஆத்மாவோ சென்று விட்டது. மற்றபடி தோலினால் என்ன பயன். பாம்பு தோலை உரித்து விடுகிறது. அதற்கு ஏதாவது மதிப்பு உள்ளதா என்ன? எதுவும் இல்லை. பக்தி மார்க்கத்தில் "தோலுக்கு" மதிப்பு உள்ளது. ஜட சித்திரத்திற்கு எவ்வளவு பூஜை செய்கிறார்கள். ஆனால் இவர்கள் எப்பொழுது வந்தார்கள் எப்படி வந்தார்கள் என்று எதுவும் தெரியாது. இதற்கு பூத பூஜை என்று கூறப்படுகிறது. பஞ்சதத்துவங்களுக்கு பூஜை செய்கிறார்கள். உதாரணமாக இந்த லட்சுமி நாராயணர் சொர்க்கத்தில் ஆட்சி புரிந்து கொண்டிருந்தார்கள். நல்லது. 150 வருடங்களின் ஆயுள் முடிந்து விட்டது. சரீரத்தை விட்டு விட்டார்கள். அவ்வளவு தான். சரீரமோ எதற்கும் பயனற்ற தாக ஆகிவிட்டது. அதற்கு அங்கு என்ன மதிப்பு இருக்கும்? ஆத்மா போய் விட்டது. சரீரத்தை சண்டாளன் கையில் கொடுத்து விட்டார்கள். அதை அங்கு இருக்கும் பழக்க வழக்கப்படி எரித்து விடுவார்கள். அப்படி யின்றி பெயர் புகழடையச் செய்வதற்காக அதனுடைய மண்ணை எடுத்து தூவுவார்கள் என்பதல்ல. இங்கோ எவ்வளவு செய்கிறார்கள். பிராமணர்களுக்கு உணவு அளிக்கிறார்கள். இது செய்கிறார்கள்... அங்கு இது எதுவும் இருக்காது. தோலோ எதற்கும் உதவாததாக ஆகிவிடும். தோலை எரித்து விடுகிறார்கள். மற்றபடி படங்கள் உள்ளது. அது கூட மிகச் சரியான படங்கள் கிடைக்க முடியாது. இந்த ஆதி தேவனின் கல்லினுடைய விக்கிரகம் மிகச் சரியானதாக (அக்யூரேட்) உள்ளதா என்ன? பூஜை ஆரம்பிக்கும் பொழுது இருந்த அப்பொழுதினுடைய கல்லினுடையது ஆகும். உண்மையில் என்ன இருந்ததோ அது எரிந்து முடிந்து விட்டது அல்லவா? பிறகு பக்தி மார்க்கத்தில் இவை வெளிப்பட்டுள்ளது. இந்த விஷயங்கள் பற்றி கூட சிந்தனையோ எழுகிறது அல்லவா? அபுவின் மகிமையை நல்ல முறையில் நிரூபிக்க வேண்டும். நீங்களும் இங்கு அமர்ந்துள்ளீர்கள். இங்கு தான் தந்தை முழு உலகத்தை நரகத்திலிருந்து சொர்க்கமாக ஆக்கிக் கொண்டிருக்கிறார். எனவே இது தான் எல்லா வற்றையும் விட உயர்ந்ததிலும் உயர்ந்த தீர்த்தமாகும். இப்பொழுது இந்த அளவு பாவனை இல்லை. ஒரு சிவனிடம் மட்டும் பாவனை உள்ளது. எங்கு சென்றாலும் சிவனின் கோவில் அவசியம் இருக்கும். அமரநாத்தில் கூட சிவனினுடையது தான் உள்ளது. சங்கரன் பார்வதிக்கு கதை கூறினார் என்கிறார்கள். அங்கோ கதையின் விஷயமே கிடையாது. மனிதர் களுக்கு எதுவுமே புரிவதில்லை. இப்பொழுது உங்களுக்கு அறிவு வந்துள்ளது. இதற்கு முன்பு தெரிந்திருந்ததா என்ன?

இப்பொழுது பாபா அபுவை எவ்வளவு மகிமை செய்கிறார்! எல்லா தீர்த்தங்களிலும் இது மகான் தீர்த்தம் ஆகும். பாபா நிறையவே புரிய வைக்கிறார். ஆனால் நெருங்கிய (ஈடுபடுகின்ற) குழந்தைகளின் புத்தியில் பதிந்தால் தானே? இப்பொழுதோ தேக அபிமானம் நிறைய உள்ளது. ஞானமோ மிகவுமே நிறைய வேண்டும். மிகவுமே தூய்மை வர வேண்டி உள்ளது. இப்பொழுதோ ஒருவருக்கு யோகத்தில் (பாபா நினைவில்) இணைவது மிகவும் கடினமாக உள்ளது. யோகத்துடன் கூடவே ஞானமும் வேண்டும். அப்படியின்றி யோகத் தில் மட்டுமே இருப்பது என்பதல்ல. யோகத்தில் ஞானம் அவசியம் வேண்டும். டில்லியில் ஞான விஞ்ஞான பவன் என்ற பெயர் வைத்துள்ளார்கள். ஆனால் அதன் பொருள் என்ன என்பதை புரிந்துள்ளார் களா என்ன? ஞானம் விஞ்ஞானம் ஒரு நொடியினுடையது ஆகும். சாந்திதாமம், சுகதாமம். ஆனால் மனிதர்களிடம் சிறிதளவும் புத்தி இல்லை. பொருளைப் புரிந்துள்ளார்களா

என்ன? சின்மயானந்தர் ஆகிய எவ்வளவு பெரிய பெரிய சந்நியாசிகள் உள்ளார்கள். கதை கூறுகிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு ஏராளமான சீடர்கள் உள்ளார்கள். எல்லோரையும் விட ஜகத்தின் (உலகத்தின்) குருவோ ஒரே ஒரு தந்தை ஆவார். தந்தை மற்றும் ஆசிரியரை விட குரு பெரிய வராக இருப்பார். ஒரு பெண் ஒரு பொழுதும் இரண்டாவது கணவனை ஏற்க மாட்டாள். அதே போல குருவும் இன்னொருவரை ஏற்கக் கூடாது. ஒரு குருவை ஏற்றுக் கொண்டீர்கள். அவர் தான் சத்கதி அளிக்க வேண்டும் என்றால் பிறகு மற்ற குருக்கள் எதற்காக? சத்குருவோ ஒரே ஒரு எல்லையில்லாத தந்தை ஆவார். அனைவருக்கும் சத்கதி அளிப்பவர் அவரே. ஆனால் இந்த விஷயங்களை நிறைய பேர் முற்றிலும் புரிந்து கொள்வதில்லை. இது ராஜதானி ஸ்தாபனை ஆகிக் கொண்டி ருக்கிறது. எனவே வரிசைக்கிரமமாக இருப்பார்கள் அல்லவா என்று தந்தை புரிய வைத்துள்ளார். ஒரு சிலரோ சிறிதளவு கூட புரிந்து கொள்ள முடியாமல் உள்ளார்கள். நாடகத்தில் அவர்களது பாகமே அவ்வாறு உள்ளது. ஆசிரியராலோ புரிந்து கொள்ள முடியும். எந்த சரீரத்தின் மூலம் புரிய வைக்கிறாரோ அவருக்கும் தெரிந்திருக்கக் கூடும். இதுவோ வெல்லத்திற்குத் தெரியும் அந்த வெல்லம் இருக்கும் கோணிப் பைக்கு தெரியும். வெல்லம் என்று சிவபாபாவிற்குக் கூறப்படுகிறது. அவர் அனைவருடைய நிலைகள் பற்றி அறிந்துள்ளார். யார் எவ்வாறு படிக்கிறார்கள் எவ்வளவு சேவை செய்கிறார்கள் என்பதை ஒவ்வொருவருடைய படிப்பின் மூலமாகப் புரிந்து கொள்ள முடியும். எந்த அளவு பாபாவின் சேவையில் வாழ்க்கையைப் பயனுள்ளதாக ஆக்குகிறார்கள்? அப்படியின்றி இந்த பிரம்மா வீடு வாசலை விட்டார், எனவே லட்சுமி நாராயணர் ஆகிறார் என்பதல்ல. உழைக்கிறார் அல்லவா? இந்த ஞானம் மிகவும் உயர்ந்ததாகும். யாராவது தந்தையின் கட்டளையை மீறுபவராக ஆகிறார்கள் என்றால், ஒரேயடியாக கல் ஆகி விடுகிறார்கள். இது இந்திர சபை ஆகும் என்பதை பாபா புரிய வைத்திருந்தார். சிவபாபா ஞான மழையைப் பொழிகிறார். அவருடைய கட்டளையை மீறினார்கள் என்றால் கல்புத்தி ஆகி விட்டார்கள் என்று சாஸ்திரங் களில் எழுதப் பட்டுள்ளது. எனவே பாபா எல்லோருக்கும் எழுதிக் கொண்டே இருக்கிறார். யாரையுமே மிகவும் கவனத்துடன் கூட அழைத்து வாருங்கள். அப்படியின்றி, விகாரி தூய்மையற்றவர் இங்கு வந்து அமருவது கூடாது. இல்லை யென்றால் அழைத்து வரும் பிராமணி மீது தோஷம் ஏற்பட்டு விடும். இது போன்று யாரையும் அழைத்து வரக் கூடாது. மிகப் பெரிய பொறுப்பு உள்ளது. மிகவும் உயர்ந்ததிலும் உயர்ந்த தந்தை ஆவார். உங்களுக்கு உலக இராஜாங்கத்தை அளிக் கிறார். எனவே அவர் மீது எவ்வளவு மதிப்பு வைக்க வேண்டும். நிறைய பேருக்கு நண்பர்கள், உறவினர்கள் ஆகியோர் நினைவிற்கு வருகிறார்கள். தந்தையின் நினைவு இருப்பதில்லை. உள்ளுக்குள்ளேயே மூச்சு திணறிக் கொண்டே இருக்கிறார்கள். இது அசுர உலகம் என்று தந்தை புரிய வைக்கிறார். இப்பொழுது தெய்வீக உலகம் உருவாகிறது. நமது லட்சியம் இதுவாகும். இந்த லட்சுமி நாராயணர் ஆக வேண்டும். என்னவெல்லாம் படங்கள் உள்ளனவோ அவர்கள் அனைவர் பற்றிய வாழ்க்கைச் சரித்திரத்தை நீங்கள் அறிந்துள்ளீர்கள். மனிதர்களுக்குப் புரிய வைப்பதற்காக எவ்வளவு உழைப்பு செய்யப்படுகிறது. இவர் கொஞ்சம் நல்ல புத்திசாலி ஆவார், இவரோ ஒன்றும் புரிந்து கொள்வதில்லை என்று நீங்களும் புரிந்து கொள்ளக்கூடும். குழந்தை களாகிய உங்களிலும் யார் எந்த அளவு ஞானம் எடுத்துள்ளீர்களோ அதற்கேற்ப தான் சேவை செய்து கொண்டிருக்கிறீர்கள். கீதையின் பகவான் பற்றியதே

முக்கியமான விஷயம் ஆகும். சூரிய வம்ச தேவி தேவதைகளினுடையது இது ஒரே ஒரு சாஸ்திரம் ஆகும். தனித் தனியானது கிடையாது. பிராமணர்களினுடையதும் தனியானது கிடையாது. இது மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஆகும். இந்த ஞான மார்க்கத்தில் கூட போகப் போக ஒரு வேளை விகாரத்தில் விழுந்து விட்டார்கள் என்றால் ஞானம் திசை மாறி விட்டது போலாகி விடும். மிகவும் நல்ல நல்லவர்கள் போய் விகாரி ஆனார்கள். பின் கல் புத்தியினர் ஆகி விட்டார்கள். இதில் மிகவும் அறிவு வேண்டும். தந்தை புரிய வைப்பதை மீண்டும் (மந்தன்) "அசை போட" வேண்டும். இங்கோ உங்களுக்கு மிகவுமே சுலபம். எந்த ஒரு சிக்கலான வேலையும். குழப்பமும் கிடையாது. தனிமையின் நிலைமை அமைந்துள்ளது. தந்தையோ பிறகும் குழந்தை களை (புருஷார்த்தம்) முயற்சி செய்வித்து கொண்டே இருக்கிறார். இந்த பாபாவும் புருஷார்த்தி (முயற்சி செய்பவர்) ஆவார். புருஷார்த்தம் செய்விப்பவரோ தந்தை ஆவார். இதில் சிந்தனைக் கடலைக் கடைய (ஞான மனனம்) வேண்டி உள்ளது. இங்கோ தந்தை குழந்தைகளுடன் கூட அமர்ந்துள்ளார். யார் முழுமை யாக விரல் (ஒத்துழைப்பு) கொடுக் கிறார்களோ அவர்களைத் தான் "சர்விசபிள்" (சேவை செய்யக் கூடியவர்) என்று கூறுவார்கள். மற்றபடி "மூச்சு திணறுபவர்களோ" (முடியாதவர்கள்) தீமை ஏற்படுத்துகிறார்கள். இன்னுமே டிஸ்சர்வீஸ் செய்கிறார்கள். தடைகள் ஏற்படுத்துகிறார்கள். மகாராஜா மகாராணி ஆகிறார்கள் என்றால், அவர்களுக்கு தாசர் தாசிகள் கூட வேண்டும் என்பதையோ அறிந்துள்ளீர்கள். அவர்களும் இங்கு இருப்பவர்களே தான் வருவார்கள். எல்லாமே படிப்பை பொருத்தது ஆகும். இந்த சரீரத்தைக் கூட குஷியுடன் விட வேண்டும். துக்கத்தின் விஷயம் அல்ல. புருஷார்த்தத்திற்காக நேரமோ கிடைத்துள்ளது. ஞானம் ஒரு நொடியினுடையது ஆகும். சிவபாபாவிடமிருந்து ஆஸ்தி கிடைக் கிறது என்பது புத்தியில் உள்ளது. சிறிதளவு ஞானம் கேட்டார்கள், சிவபாபாவை நினைவு செய்தார்கள் என்றாலும் கூட வரமுடியும். பிரஜைகளோ நிறைய உருவாக வேண்டி உள்ளது. நமது ராஜதானி சூரிய வம்சத்தினுடையது மற்றும் சந்திர வம்சத்தினுடையது இங்கு ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. தந்தையினுடையவர் ஆன பிறகு நிந்தை செய்கிறார்கள் என்றால் மிகுந்த சுமை ஏறுகிறது. ஒரேயடியாக பாதாளத்தில் சென்று விடுகிறார்கள். யார் வந்து தங்களை பூஜிக்கிறார்களோ அவர்கள் எவ்வாறு பூஜிக்கத்தக்கவர் என்று கூறிக் கொள்ள முடியும் என்று பாபா புரிய வைத்திருந்தார். அனைவருக்கும் சத்கதி அளிக்கும் வள்ளல் (சத்கதி தாதா) நன்மை செய்பவரோ ஒரே ஒரு தந்தை ஆவார். மனிதர்களோ அமைதியின் பொருள் கூட புரியாமல் உள்ளார்கள். ஹடயோகத்தினால் பிராணாயாமம் ஆகியவை செய்வது அதையே சாந்தி என்று நினைக்கிறார்கள். அதில் மிகுந்த உழைப்பு ஏற்படுகிறது. ஒரு சிலருடைய மூளை கெட்டுப் போய் விடுகிறது. பிராப்தி (பலன்) எதுவும் கிடையாது. அது குறுகிய கால சாந்தி ஆகும். எப்படி சுகத்தை குறுகிய காலத்தினுடையதாக காக்கை எச்சத்திற்குச் சமம் என்று கூறுகிறார்கள். அதே போல அந்த சாந்தி கூட காக்கை எச்சத்திற்குச் சமம் ஆகும். அது இருப்பதே குறுகிய காலத்திற்கானதாக. தந்தையோ 21 பிறவிகளுக்கு உங்களுக்கு சுகம் சாந்தி இரண்டையும் அளிக்கிறார். ஒரு சிலரோ சாந்தி தாமத்தில் கடைசி வரையும் இருக்கக் கூடும். யாருக்கு இப்படி பாகம் இருக்கிறதோ அவர்கள் இந்த அளவு சுகத்தைப் பார்க்க முடியுமா என்ன? அங்கு கூட வரிசைக்கிரமமாக பதவிகளோ இருக்கும் அல்லவா? தாசர் தாசிகள் இருப்பார்கள் என்றாலும் கூட உள்ளுக்குள் நுழைய

முடியுமா என்ன? கிருஷ்ணரைக் கூட பார்க்க முடியாது. எல்லோருக்கும் தனித்தனியான அரண்மனை கள் இருக்கும் அல்லவா? பார்ப்பதற்கு ஏதோ ஒரு நேரம் இருக்கக் கூடும். எப்படி பாருங்கள் போப் வருகிறார் என்றால் அவரை தரிசனம் செய்வதற்காக எத்தனை பேர் செல்கிறார்கள். இது போல நிறைய பேர் வெளிப்படுவார்கள். அவர்களுடைய தாக்கம் அதிகமாக ஏற்படும். இலட்சக் கணக்கான மனிதர்கள் தரிசனம் செய்வதற்காக செல்வார்கள். இங்கு சிவபாபாவின் தரிசனம் எப்படி ஆகும்? இதுவோ புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் ஆகும்.

இது எல்லாவற்றையும் விட உயர்ந்த தீர்த்தம் ஆகும் என்பது இப்பொழுது உலகிற்கு எப்படி தெரிய வரும். தில்வாலா போல ஒரு வேளை அக்கம் பக்கத்தில் ஏதாவது கோவில் இருந்தால் அதையும் போய் பார்க்க வேண்டும். எப்படி அமைக்கப்பட்டுள்ளது என்று. அவர்களுக்கு ஞானம் அளிக்க வேண்டிய அவசியம் கூட இல்லை. அவர்கள் பின் உங்களுக்கு ஞானம் அளிக்க முற்பட்டு விடுவார்கள். இது செய்ய வேண்டும் அது செய்ய வேண்டும் என்று ஆலோசனை அளிக்கிறார்கள் அல்லவா? இவர்களுக்கு கற்றுத் தருபவர் யார் என்பதையோ அறியாமல் உள்ளார்கள். ஒவ்வொருவருக்காக புரிய வைப்பதில் உழைப்பு தேவைப்படுகிறது. அது பற்றி கதைகள் கூட உள்ளன. புலி வருகிறது புலி வருகிறது.... என்று கூறிக் கொண்டிருந்தார். நீங்களும் உலக அழிவு வந்து விட்டது போலவே கூறுகிறீர் கள். பின் அவர்கள் நம்புவதில்லை. இன்னும் 40 ஆயிரம் வருடங்கள் உள்ளன. உலக அழிவு எங்கிருந்து வரும் என்று நினைக் கிறார்கள். ஆனால் அவசியம் அழிவு வரப் போகிறது. எல்லோரையும் அழைத்துச் செல்வார். அங்கு எந்த ஒரு குப்பையும் இருக்காது. இங்கு இருக்கும் பசு மற்றும் அங்கு இருக்கும் பசுவில் கூட எவ்வளவு வித்தியாசம் இருக்கும்! கிருஷ்ணர் பசுக்களை மேய்த்துக் கொண்டு இருந்தாரா என்ன? அவரிடமோ பால் ஹெலிகாப்டரில் வந்து கொண்டிருக்கக் கூடும். இந்த குப்பை கூளம் எல்லாம் தூரத்தில் இருக்கக் கூடும். வீட்டிற்கு முன்னால் குப்பை இருக்குமா என்ன? அங்கோ அளவற்ற சுகம் இருக்கும். அதற்காக முழுமையாக புருஷார்த்தம் செய்ய வேண்டும். எவ்வளவு நல்ல நல்ல குழந்தைகள் சென்டரிலிருந்து வருகிறார்கள். பாபா பார்த்து எவ்வளவு குஷி அடைகிறார். வரிசைக் கிரமமாக முயற்சிக்கேற்ப மலர்கள் வெளிப்படுகிறார்கள். யார் தன்னையும் மலர் என்று நினைக்கிறார்களோ அவர்கள் மலர் ஆவார்கள். டில்லியில் கூட குழந்தைகள் இரவு பகலாக எவ்வளவு சேவை செய்கிறார்கள். ஞானம் கூட எவ்வளவு உயர்ந்தது ஆகும். இதற்கு முன்பு எதுவும் தெரியாமல் இருந்தீர்கள். இப்பொழுது எவ்வளவு உழைப்பு செய்ய வேண்டி வருகிறது. பாபாவிடமோ எல்லா செய்திகளும் வருகிறது. ஒரு சிலருடையதைக் கூறுகிறார். ஒரு சிலருடையதைக் கூறுவதில்லை. ஏனெனில் துரோகிகள் கூட நிறைய பேர் ஆகிறார்கள். மிகவுமே முதல் தரமாக இருந்தவர்கள் (ஃபர்ஸ்ட் கிளாஸ்) கூட துரோகிகள் ஆகி விடுகிறார்கள். மூன்றாவது தரமான (தர்ட் கிளாஸ்) துரோகிகள் கூட உள்ளார்கள். சிறிது ஞானம் கிடைத்ததோ இல்லையோ, நாங்கள் சிவபாபாவிற்கும் பாபா ஆகி விட்டோம் என்று நினைக்கிறார்கள். யார் ஞானம் (நாலேஜ்) அளிக்கிறார் என்ற நினைப்பே இல்லை. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் வெகுகாலம் கழித்து கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம்.

ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. உலக அரசாட்சி அளிக்கக் கூடிய தந்தை மீது மிக மிக மதிப்பு வைக்க வேண்டும். தந்தையின் சேவையில் தனது வாழ்க்கையைப் பயனுள்ளதாக ஆக்க வேண்டும். படிப்பின் மீது முழுமையான கவனம் கொள்ள வேண்டும்.

2. தந்தையிடமிருந்து கிடைக்கும் ஞானத்தின் மீது ஞான மனனம் செய்ய வேண்டும். ஒரு பொழுதும் தடையாக ஆகக் கூடாது. டிஸ்சர்வீஸ் செய்யக் கூடாது. அகங்காரத்தில் வரக் கூடாது.

வரதானம்: நான்கு பாடங்களிலுமே தந்தையின் இதயத்திற்கு விருப்பமான மதிப்பெண்கள் பெற்று விடக்கூடிய இதய சிம்மாசனத்தில் அமருபவர் ஆவீர்களாக.

எந்த குழந்தைகள் நான்கு பாடங்களிலுமே நல்ல மதிப்பெண்கள் பெறுகிறார் களோ, ஆரம்ப முதல் இறுதி வரை நல்ல நம்பரில் தேர்ச்சி பெறகிறார்களோ அவர்களுக்குத் தான் பாஸ் வித் ஆனர் என்று கூறப்படுகிறது. இடையிடையே மதிப்பெண்கள் குறைந்து விட்டது, பிறகு (மேக் அப்) சரி செய்து கொண்டு விட்டேன் என்பதல்ல. ஆனால் எல்லா பாடங்களிலும் தந்தையின் இதயத்திற்கு விருப்பமானவர்களே இதய சிம்மாசனத்தில் அமருபவர்கள் ஆகிறார்கள். கூட கூடவே பிராமணர்களின் உலகத்தில் அனைவருக்கும் பிரியமானவர்கள், அனைவருக்கும் சகயோகி ஒத்துழைப்பு அளிப்பவர்கள், அனைவருடைய மதிப்பை பெற்றிருப்பவர்கள் தான் இதய சிம்மாசனத்தில் அமருபவர்களாக மற்றும் இராஜ்ய சிம்மாசனத்தில் அமருபவர்களாக ஆகிறார்கள்.

சுலோகன்: யாருடைய இதயத்தில் (தில்) நான் தந்தையினுடையவன், தந்தை என்னுடையவர் என்ற இடையறாத கீதம் எப்பொழுதும் இசைத்து கொண்டிருக்கிறதோ அவர்களே தில் ரூபா என்ற இசைக்கருவி ஆவார்கள்.